கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.178/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 04.03.2025 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC), திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 04.03.2025 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சவுரிராஜன் | வயது.. | 65 |
| தந்தை பெயர்.. | முருகேசன் | கிராமம்.. | ஓடாக்கநல்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

20. கோவிந்தன் வாரிசுகள் 10.12.1935 அன்று 1 செண்ட் கிரயம் தங்கராசுவிற்கு எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சக்குபந்தியை நான் பார்த்தேன் என்றால் தெரியாது. 1949 பாக அட்டவணை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். 17.03.1990 இல் வழக்கு சொத்திற்கு நான் பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் வழக்கு ஏதேனும் நிலுவையில் இருந்ததா என்றால் இல்லை வழக்கு முடிந்துவிட்டது. 4 செண்ட் நிலத்திற்கு பட்டா வாங்கியதாக குறிப்பிடப்பட்ட நிலையில் எந்த பத்திரத்தின் அடிப்படையில் பட்டா வாங்கினேன் என்றால் பத்திரம் இல்லை ஆனால் நீதிமன்ற தீர்ப்புரை OS.755/1967 காண்பித்து வாங்கினேன். OS.755/1967 வழக்கில் எனக்கு தான் 4 செண்ட் பாத்தியம் என்று தீர்ப்பானது என்றால் எனக்கு தெரியாது.

21. வழக்கு நிலுவையில் இருக்கும்போது தான் என் மனைவிக்கு தானசெண்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தேன் என்றால் இல்லை அந்த சமயத்தில் வழக்கு முடிந்துவிட்டது. என் மனைவிக்கு எப்போது செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன் என்றால் 23.4.2010. வழக்கிற்கு பின்னிட்டு வாதிகளுக்கும் எனக்கும் விரோதம் உள்ளதா என்றால் இல்லை. 1953 இல் இருந்து 16 செண்ட் நிலத்தை தங்கராசு தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் அதன் பட்டா எண்.262 என்றாலும் சரியல்ல. தங்கராசு எப்போது இறந்தார் என்றால் 1981. தங்கராசுவின்

இறப்பிற்கு பின்னிட்டு அவருடைய வாரிசுகள் தான் 16 செண்ட் நிலத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2010 இல் எங்களுக்குள் பாகபிரிவினை ஏற்பட்டதா என்றால் 19.04.2010 கிட்டு,இளங்கேஷ்வரன்,தனசேகரன், இளங்கோவன் ஆகியோர்கள் மட்டும எழுதி பதிவு செய்து கொண்டார்கள். 17.03.1990 இல் பொய்யாக நான் பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு நான் தான செட்டில்மெண்ட் எழுத எனக்கு உரிமை இல்லை என்றாலும் அந்த செட்டில்மெண்ட் பத்திரம் அமலுக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை எந்த காலத்திலும் நான் அனுபவித்தது இல்லை என்றாலும் சரியல்ல.

**சாட்சி விசாரணைமுடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Additional District Munsif(FAC),
Chidambaram.